# தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் விடுக்கும் தமிழ்ப்புத்தாண்டு – பொங்கல் திருநாள் வாழ்த்துச் செய்தி! (13.1.2010)

தைத்திங்கள் முதல் நாள் – தமிழ்ப் புத்தாண்டு – பொங்கல் திருநாள் ! தமிழர் வாழும் இடமெல்லாம் மிகுந்த மகிழ்ச்சிப் பெருக்கோடு கொண்டாடப்படும் பொன்னாள் இந்நாள்!

தமிழகம் முழுவதும் சீரான மழை – செழிப்பான விளைச்சல் என உழவர் பெருமக்கள் உளம் குளிர வேளாண்மையின் வளம் பெருகியுள்ள வேளையில், இவ்வாண்டின் பொங்கல் விழாவையும், தமிழ்ப்புத்தாண்டுத் திருநாளையும் கொண்டாடும் எனதருமைத் தமிழ்ச்சமுதாய மக்கள் வாழ்வில் வளமும் நலமும் செழிக்கட்டும்! மகிழ்ச்சியும் இன்பமும் பொங்கிப் பெருகட்டும்! – என என் உளமார வாழ்த்துகிறேன்.

“இந்தியப் பண்பாட்டில் 75 விழுக்காடு, திராவிடப் பண்பாடு” என சுநீதிகுமார் சட்டர்ஜி என்னும் ஆய்வியல் அறிஞர் குறிப்பிடுகின்றார். அத்தகைய பெருமை வாய்ந்த திராவிடப் பண்பாட்டின் இன்றைய வடிவமாக விளங்கும் தமிழ்ச்சமுதாயம் தழைத்திட எந்த வகையிலெல்லாம் உதவிட முடியும், நன்மைகளை நிறைவேற்றிட முடியும், சலுகைகளை வழங்கிட முடியும் என ஒவ்வொரு நொடி நேரத்தையும் எண்ணி எண்ணிச் செலவிட்டு, உழைத்து வருகின்றது இந்த அரசு.

வேளாண்மை செழித்து விவசாயிகள் பயன்பெற பம்ப் செட்டுகளுக்கு இலவச மின்சாரம்! 7000 கோடி ரூபாய் கூட்டுறவுக் கடன் தள்ளுபடி! பயிர்க் காப்பீட்டுத் திட்டம்! நெசவாளர்கள் உட்பட பல்வகைத் தொழிலாளர்கள், பாட்டாளிகள், உழைப்பாளிகள் நலன்களைக் காத்திட விவசாயத் தொழிலாளர்கள் நல வாரியம் முதலான 30 அமைப்புசாராத் தொழிலாளர் நல வாரியங்கள்! தொழில்கள் வளர, வேலைவாய்ப்பு பெருக புதிய தொழிற்சாலைகள்! ஏழை எளியோர் மகிழ இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள்! ஒருகிலோ அரிசி ஒரு ரூபாய்க்கு வழங்கும் திட்டம்! மகளிர் சுயஉதவிக்குழுக்கள், மூவலூர் மூதாட்டியார் நினைவு திருமணத் திட்டம், கர்ப்பிணிப் பெண்களுக்கு 6000 ரூபாய் நிதியுதவி முதலான மகளிர் மேம்பாட்டுத் திட்டங்கள், நல வாழ்வு நல்கிட தனியார் மருத்துவ மனைகளுடன் இணைந்து, “கலைஞர் காப்பீட்டுத் திட்டம்” உட்பட பல்வேறு மருத்துவக் காப்பீட்டுத் திட்டங்கள்! அவசர மருத்துவ ஊர்தி–108 – முதலான மக்களால் பாராட்டப்படும் திட்டங்கள் பலவற்றை இந்த அரசு இதுவரை நடைமுறைப் படுத்தியுள்ளதுடன், வரும் ஆண்டுகளில், 21 இலட்சம் கூரை வீடுகளைக் கான்கிரீட் வீடுகளாக மாற்றிட, “கலைஞர் வீட்டுவசதித் திட்டம்” எனும் மிகப் பெரிய திட்டத்தையும் புதிதாக நடைமுறைப்படுத்தவுள்ளது.

தமிழகத்தில் வாழும் ஏழை எளியோர் நலம்பெற வேண்டும் எனும் விழைவோடு – தமிழகம் இந்தியாவில் அனைத்து வகையிலும் முன்னோடி மாநிலமாகப் புகழ்குவிக்க வேண்டும் என்னும் உணர்வோடு இத்தகைய திட்டங்களை நிறைவேற்றிவரும் தமிழக அரசின் சார்பில் தமிழக மக்கள் அனைவர்க்கும் எனது உளமார்ந்த தமிழ்ப் புத்தாண்டு – பொங்கல் திருநாள் நல்வாழ்த்துகளைத் தெரிவித்து மகிழ்கிறேன்.,.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.

****